
10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 275 வெள்ளிக்கிழமை 23 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48



## கிளிநொச்சியில் மர்மக் கொலை

### இளைஞனின் சடலம் குளத்தில்

கிளிநொச்சி, பெப்.23,

கிளிநொச்சி புதுமுறிப்புக் குளத்திலிருந்து மர்மமான முறையில் கொலையுண்ட இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி உதயநகர் பகுதியைச் சேர்ந்த ப.டனுசன் (வயது 25) என்பவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

ஒட்டோ உரிமையாளரான குறித்த இளைஞர் தனது ஓட்டோவில் வாடகைக்கு அமர்த்திய சிலரை ஏற்றிக் கொண்டு நேற்று முன்தினம் மாலை சென்ற நிலையில் வீடு திரும்பவில்லை என உறவினர்கள் தெரிவித்தனர். இந்நிலையில் நேற்று 06▶

## பாடையில் நல்லாட்சி



முல்லைத்தீவு, பெப்.23

முல்லைத்தீவில் கோத்தபாய படைத்தள சுவீகரிப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் நல்லாட்சி அரசிற்குப் பாடை கட்டி, அதை முகாமுக்கு முன்பாக எரித்தனர். (அ)

## வடக்கு -கிழக்கில் பெண்கள் 'அவுட்'



கொழும்பு, பெப்.23,

வடக்கு, கிழக்கில் உள்ள குறைந்தது 10 உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கான 25 வீத பிரதிநிதித்துவத்தை நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தேர் 06▶

# கோத்தா முகாமில் மக்கள் போர்



முல்லைத்தீவு, பெப்.23,

முல்லைத்தீவில் இராணுவத்தினருக்கான காணி சுவீகரிப்புக்கு எதிராக மக்கள் மேற்கொண்ட போராட்டத்தால் அந்த முயற்சி கைவிடப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் கிழக்கு வட்டுவாகல் பகுதியில் 637 ஏக்கர் காணியில் அமைக்கப்பட்டுள்ள கோத்தபாய கடற்படை முகாமுக்காக காணிகளை நிரந்தரமாகச் சுவீகரிக்க நில அளவீட்டு பணி நேற்று நடைபெற்றது.

இந்தநிலையில் குறித்த பகுதியில் ஒன்று கூடிய காணி உரிமையாளர்கள் கடற்படை முகாமுக்கு முன்பாக தமது எதிர்ப்பை தெரிவித்து ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டு நில அளவையாளர் 06▶

## தேசிய அரசைக் காக்க சர்வதேசம் சூழ்ச்சியாம்



கொழும்பு, பெப்.23.

தேசிய அரசைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கா, இந்தியா போன்ற சர்வதேச நாடுகள் கடும் சூழ்ச்சிகளை மேற்கொள்கின்றன என்றும் அந்த முயற்சிகள் தம்மால் முறியடிக்கப்படும் என்றும் மகிந்த அணி எம்.பி விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

"உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் இந்த அரசுக்கு மாத்தி 06▶

## புகைப்பட மிரட்டல்



முல்லைத்தீவு,பெப்.23

கோத்தபாய கடற்படை முகாமுக்காக காணி அபகரிப்பின் ஓர் அங்கமான நில அளவைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பொதுமக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் , மக்களை 06▶

## உள்ளூராட்சி உறுப்பினர்கள் மார்ச் 6 இல் பதவியேற்பு

### அமைச்சு அறிக்கை

கொழும்பு, பெப்.23,

உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவான அங்கத்தவர்களின் பதவிக் காலம் மார்ச் 6ஆம் திகதி தொடங்குகிறது. இந்த சபைகளின் உறுப்பினர்கள் பற்றிய சட்டபூர்வ நிலைமையை விளக்கும் வகையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. 06▶

## பிரியங்க வந்து சேர்ந்தார்

கொழும்பு, பெப்.23,

பிரிட்டனுக்கான இலங்கைத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகரான பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ நேற்று கொழும்பை வந்தடைந்துள்ளார்.

லண்டனில் இலங்கைத் தூதரகம் முன்பாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது, கழுத்தை அறுத்து விடுவது போல சைகையில் எச்சரிக்கை செய்த விவகாரத்தை அடுத்து இவர் சர்ச்சையில் சிக்கியிருந்தார்.

இந்த நிலையில் பிரிகேடியர் பிரியங்க பெர்னான்டோவை இராணுவத் தளபதி , சிறப்புக் கலந்துரையாடலுக்காக கொழும்புக்குத் திருப்பி அழைத்துள்ளார்.

இதற்கமைய நேற்றுப் பிற்பகல் அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார். இவருக்கு எதிராக விசாரணைகளோ, ஒழுங்கு நடவடிக்கைகளோ எடுக்கப்படாது என்று இராணுவப் பேச்சாளர் நேற்று கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## வாக்குறுதியை நிறைவேற்ற அழுத்தம் கொடுங்கள்

### சம்பந்தன் கோரிக்கை

கொழும்பு,பெப்.23

"சர்வதேசத்துக்கும், மக்களுக்கும் இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற அழுத்தம் கொடுங்கள்" என அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்களிடம் எதிர்க்கட்சித் 06▶

## பெற்றோல் வதந்தி மக்களுக்கு அவதி



யாழ்ப்பாணம், பெப்.23

பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டுள் 06▶

உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்

# தேசிய அரசு தொடர்வது சட்டவிரோதமானது

## ஜே.வி.பி தெரிவிப்பு



கொழும்பு, பெப்.23

"ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம், திருமண ஒப்பந்தம் கிடையாது. இதில் ஐ.தே.கவை, கணவனாகவும் ஐ.ம.சு.கூவை மனைவியாகவும் கருத முடியாது" எனத் தெரிவித்துள்ளார் ஜே.வி.பியின் தலைவரும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான அநுரகுமார திஸாநாயக்க.

தேசிய அரசாங்கம் தொடர்பிலான நிலைப்பாட்டை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், ஐ.ம.சு.கூவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மஹிந்த அமரவீரவும், நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அறிவித்ததன் பின்னர், கருத்துரைக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஐ.ம.சு.கூவும் ஐ.தே.கவும் தொடர்ச்சியாக ஒன்றிணைந்தே செல்கின்றன என்று கூறப்படுகின்றது. 2 ஆண்டுகளுக்கு மாத்திரமே தேசிய அரசாங்கம் கொண்டு செல்லப்படும் என நீங்கள் (சபாநாயகர்) கூறினீர்கள்.

அப்படியாயின், செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதியுடன் இந்த ஒப்பந்தம் இரத்தாகிவிட்டது. நல்லாட்சி அரசாங்கத்தை நீடிப்பதாயின், புதிய ஒப்பந்தமொன்றைச் செய்திருக்கவேண்டும். எனினும், 4 மாதங்கள் கடந்துவிட்டன. இந்த 4 மாதங்களும் ஒன்றாக இருந்தீர்கள். ஆனால், 48 அமைச்சர்களும் இந்த நான்கு மாதங்களில், சட்டத்துக்குப் புறம்பான வகையில் பதவி வகிக்கின்றனர்.

இது, அரசியலமைப்புக்கு முரணானது. நீங்கள் புதிய ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்க வேண்டும். அமைச்சர்களின் எண்ணிக்கையை 30 இல் இருந்து 35 வரையும் பிரதியமைச்சர்களை 45 வரையும் அதிகரித்திருக்க வேண்டும்.

அரசியலமைப்புப் பிரகாரம் அமைச்சர்களை 40 இல் இருந்து 48ஆகவும் பிரதியமைச்சர்களை 40-45ஆகவும் உயர்த்தும் யோசனையை வெறுமனே கொண்டு வரமுடியாது. அந்த யோசனையை கொண்டு வருவதற்கு முன்னர் ஓர் உடன்பாட்டுக்கு வந்திருக்க வேண்டும். அந்த வகையில், தேசிய அரசாங்கத்துக்குள் உடன்பாடு இல்லாமல், இந்தப் பிரேரணையைக் கொண்டு வர முடியாது. தேசிய அரசாங்கத்தின் கால எல்லை மீறிச் செல்லும் போது, இந்தப் பிரேரணையின் காலமும் மீறிச் செல்லும்" எனவும் அநுரகுமார தெரிவித்தார்.(அ

# பிரியங்கவை விசாரிக்கோம்

## இலங்கை திட்டவட்டம்

கொழும்பு, பெப்.23

லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராகப் பணியாற்றிய பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, கலந்துரையாடலுக்காகவே கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

"பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவுக்கு எதிராக எந்த விசாரணைகளும் நடத்தப்படாது. என்ன நடந்தது என்று நாங்கள் அவருடன் பேச வேண்டியுள்ளது. இந்தச் சம்பவத்தின் விளைவாக, இராஜதந்திர அழுத்தங்கள் இருந்தன. இது நாட்டின் நற்பெயருடன் தொடர்புபட்டிருப்பதால், கலந்துரையாட வேண்டிய தேவை உள்ளது. இது ஒரு தீவிரமான குற்றமல்ல என்பதே இராணுவத்தின் கருத்து. அவரை ஒரு பகுதியினர் ஆதரிக்கின்றனர். இன்னொரு பகுதியினர் விமர்சிக்கின்றனர். இந்த நிலையில், என்ன நடந்தது என்று கண்டறிய வேண்டும்." என்றும் தெரிவித்தார். (அ)

# என் கையில் எதுவுமில்லை

கொழும்பு, பெப்.23

மூன்று தரப்பினரும் உடன்பட்டால், தேசிய அரசாங்கத்தை முன்னெடுப்பது தொடர்பில் தன்னால் எவ்விதக் கருத்தையும் தெரிவிக்க முடியாதென, சபாநாயகர் கருஜய சூரிய, நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

மேலும், "தேசிய அரசாங்கம் தொடர்பில், கட்சித் தலைவர்கள் மூவரிடத்திலும் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தேன்.

இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. இதற்கு மூன்று தரப்பினரும் உடன்பட்டுவிட்டால், இவ் விவகாரத்தில் அதற்கு மேல் என்னால் தனியான முடிவொன்றை எடுக்க இயலாது" என்றார் அவர். (அ)

### நாடாளுமன்றைச் சூடாக்கிய

# 2 கோடி ரூபா இலஞ்ச விவகாரம்

கொழும்பு, பெப்.23

2018 ஆம் ஆண்டு, வரவு - செலவுத் திட்டத்துக்கு, ஆதரவு வழங்குவதற்காக, 20 மில்லியன் ரூபாயை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலஞ்சமாகப் பெற்றதாகக் கூறப்படும் விவகாரம், நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் சூடுபிடித்தது.

இந்தச் சலசலப்பையடுத்து, சபாநாயகர் கரு ஜயசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை அமருமாறும், இல்லையேல் சபை நடவடிக்கையிலிருந்து வெளியேற்றிவிடுவதாகவும் கடும் தொனியில் எச்சரிக்கை விடுத்தார்.

"வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிப்பதற்கு, 20 மில்லியன் ரூபாயை, இலஞ்சமாக நாங்கள் பெற்றதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பியான சிவசக்தி ஆனந்தன், எம் மீது குற்றம் சுமத்தியுள்ளார். இது, எமது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது" என சுமந்திரன் எம்.பி குற்றம்சாட்டினார்.

இதன்போது எழுந்த, சரவணபவன் எம்.பி, "இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில், உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்றார்.

இதனிடையே எழுந்த சிவசக்தி ஆனந்தன் எம்.பி, "வரவு-செலவுத் திட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு எமக்கும் அழுத்தம் கொடுக்கப்பட்டது. அதற்கு நாம் மறுப்புத் தெரிவித்தோம். பொருளாதார அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்படும் என்ற காரணத்தைக் காட்டியே, இதற்கு ஆதரவு வழங்குமாறு கோரப்பட்டது" என்றார். சிவசக்தி ஆனந்தனின் கூற்றைக்கு கடுமையான எதிர்ப்பை சுமந்திரன் எம்.பி வெளிப்படுத்தினார். இதன்போது,

அக்கிராசனத்தில் இருந்த சபாநாயகர், சுமந்திரன் எம்.பிக்கு கடுமையாக எச்சரிக்கை விடுத்து, அமருமாறு கூறினார்.

எனினும், சிவசக்தி ஆனந்தன் எம்.பி தெரிவித்த கருத்தை ஹன்சாட்டிலிருந்து நீக்க வேண்டுமென, சுமந்திரன் எம்.பி கோரிக்கை விடுத்தார். (அ)

## தையல் இயந்திரங்கள் வழங்கல்






யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்ப்பாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 1.5 மில்லியன் ரூபா நிதியில், யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 15 கிராம மகளிர் அமைப்புகளுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்த நா.பஞ்சலிங்கம் தலைமையில் இடம்பெற்ற மனைப்பொருளியல் டிப்ளோமா கண்காட்சி-2018 நிகழ்வை ஆரம்பித்து வைத்த, யாழ்.மாவட்ட அரசஅதிபர்,குறித்த தையல் இயந்திரங்களைப் பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார். (அ-11)



# வடக்குக்கு இரண்டு: கிழக்குக்கு ஒன்று

மகிந்த யுத்தத்தை வெற்றிகரமாக முடித்து வைப்பதற்கு அதிகம் துணை நின்றவர் அவரின் சகோதரர் கோத்தபாய ராஜபக்ச என்று சொல்கிறார்கள். ஆனால், யுத்தப் பங்காளிகளில் ஒருவரான முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா இதை மறுக்கின்றார். யுத்த வெற்றிக்கான முழு உரிமையையும் அவரே கோருகின்றார்.

15 வருடங்கள் அமெரிக்காவில் கணினி இயக்குநராக கடமையாற்றிய கோத்தாவால் பலம் கொண்ட புலிகளை எப்படி வெல்ல முடியும்? என்று பொன்சேகா கேள்வி எழுப்புகின்றார்.


அதுமட்டுமா...யுத்த காலத்தில் வடக்குக்கு இரண்டு தடவைகளும் கிழக்குக்கு ஒரு தடவையும் மாத்திரம் சென்று பார்த்த கோத்தாவால் எப்படி புலிகளை ஒழிக்க முடியும்? என்றும் பொன்சேகா மேலும் கேள்வி எழுப்புகின்றார்.

ஆம்...யுத்த காலத்தில் கோத்தா வடக்குக்கு இரண்டு தடவைகளும் கிழக்குக்கு ஒரு தடவையும் பயணம் செய்தாராம். அந்த மூன்று தடவைகளும் விமானப் படையினரின் விமானத்தில் தன்னுடன்தான் சென்றார் என்று பொன்சேகா மேலும் கூறுகின்றார். தான் சொல்வது பொய்யென்றால் விமானப் படையினரை முறையாகத் தொடர்பு கொண்டு கேளுங்கள் என்றும் உசுப்பிவிடுகின்றார்.

இவ்வாறான காரணங்களை வைத்துக் கொண்டுதான் பொன்சேகா யுத்த வெற்றிக்கான முழு உரிமையையும் கோரி வருகின்றார். பொன்சேகா சொல்வதை வைத்துப் பார்த்தால் அவர் சொல்வது உண்மைதான் என்றுபடுகின்றது.

அப்படி யுத்த வெற்றிக்கு உரிமை கோரும் பொன்சேகாதானே, போர்க்குற்ற மீறலுக்கும் பொறுப்பாக முடியும்.

போர்க்குற்றம் மகிந்த குடும்பத்துக்கு, போர் வெற்றி மட்டும் பொன்சேகாவுக்கா?



எதிரொலி
Ethiroli
வெள்ளி 23 பெப்ரவரி 2018 ethirolimedia@gmail.com

# ஏன் வெடித்தது குண்டு?

போர் முடிந்த பின்னர் இரண்டாவது குண்டுவெடிப்பு தியத்தாலவையில் இடம்பெற்றிருக்கிறது. இதற்கு முன்னர் 2017 ஆம் ஆண்டு கொஸ்கம–சலாவ பகுதியில் படையினரின் ஆயுதக் கிடங்கு ஒன்றில் இருந்த குண்டுகள் வெடித்து அந்தப் பகுதியையே துவம்சம் செய்திருந்தன. ஆனால் அதன்போது உயிரிழப்புக்கள் ஏற்பட்டதாகக் கூறப்பட்டாலும், அதனை அரசு வெளியில் தெரியாமல் செய்துவிட்டது.

இப்போது இரண்டாவது குண்டு வெடிப்பு, பஸ் ஒன்றுக்குள் நிகழ்ந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குச் சென்ற இந்த பஸ்ஸில் அதிகளவில் விடுமுறையில் செல்லும் படையினரே இருந்துள்ளனர். அப்படிச் சென்ற படையினரில் ஒருவர் கொண்டு சென்ற கைக்குண்டே தவறுதலாக வெடித்து இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

நல்ல வேளையாக, இந்தக் குண்டுவெடிப்பை ஒரு பயங்கரவாதச் செயலாகக் காட்டி, மீண்டும் புலிகள் என்றொரு மாயையை உருவாக்கி, அதன் மூலம் இன்னொரு அரசியல் ஆதாயத்தை இதுவரை எவரும் முயலவில்லை. ஏனெனில் இந்தக் குண்டுவெடிப்பை, புலிகளே செய்தார்கள் என்று திரிபுபடுத்த சில காரணிகள் உண்டு. குறித்த பஸ் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்றமை, அந்த பஸ்ஸில் அதிகளவில் படையினர் பயணித்தமை, மகிந்தவின் தேர்தல் வெற்றிமுகம் என்பனவெல்லாம் புலிகள் தான் இந்தக் குண்டு வெடிப்பை நிகழ்த்தினார்கள் என்று பழியைப் போடுவதற்கு உகந்த 'சாட்டுக்கள்' இருந்தன.

ஆயினும் இருக்கின்ற அரசியல் குழப்பம், இப்படி குண்டுவெடிப்புக்கு புலிச்சாயம் பூசுவதால் இன்னும் சிக்கலாகி விடும் என்பதை உணர்ந்த அரசு, எடுத்த எடுப்பிலேயே 'இதுவொரு பயங்கரவாத நடவடிக்கை இல்லை' என்று அறிவித்து, மக்களிடையே எழக்கூடிய சந்தேகங்களுக்கு ஆரம்பத்திலேயே முற்றுப்புள்ளி வைத்துவிட்டது.

ஆயினும் இந்தக் குண்டுவெடிப்புக்கான காரணத்தையும், அதன் சூத்திரதாரியையும் கண்டறிய வேண்டியதும், அதைப் பகிரங்கப்படுத்த வேண்டியதும் கட்டாயமானது. அரச தரப்பு தகவல்களின் படி, சிப்பாய் ஒருவர் , தன் மேலதிகாரிகளுக்குத் தெரியாமல் கடத்திச் சென்ற கைக்குண்டே தவறுதலாக வெடித்துள்ளது. ஒரு சிப்பாய் விடுமுறையில் செல்வதானால் தன் வசமுள்ள ஆயுதங்களை, முகாம் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்து விட்டே செல்லவேண்டும். ஆனால் குறித்த சிப்பாயோ, எப்படியோ ஒரு கைக்குண்டை தன்னோடு எடுத்துச் சென்றுள்ளார். எதற்காக அவர் அந்தக் கைக்குண்டைக் கொண்டு செல்லவேண்டும்? பாதாள உலகக் கும்பல்களுக்கு விற்பனை செய்யவா அல்லது தனது தனிப்பட்ட தேவைக்காகவா? என்பன போன்ற வினாக்களுக்கும் அரசு விடை கண்டுபிடிக்க வேண்டும். இப்போது இந்தக் குண்டு வெடிப்புக்கு புலிப் பூச்சாண்டி காட்டாவிட்டாலும்,இனிமேல்இதுபோன்றகடத்தப்படும் ஆயுதங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் நாசகாரச் செயல்களுக்கு அவ்வாறான பொய்ச் சித்தரிப்புக்கள் மேற்கொள்ளப்படலாம். எனவே அதனைத் தடுத்து நிறுத்த, இது போன்ற சட்டவிரோத ஆயுதக் கடத்தல்களைத் தடுக்க அரசு முனைய வேண்டும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"



# புளியங்குளம் வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு திறப்பு

வவுனியா, பெப்.23

வவுனியா, புளியங்குளம் பிரதேச வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சுதந்திர சுகாதார சேவையினை வலுப்படுத்தும் நோக்கில் முன்மாதிரியாக கொண்டு எய்ட்ஸ், சலரோகம், மலேரியா நோய்களை அழித்தொழிப்பதற்கான கருத்திட்ட உலக நிதியத்தின் கீழ் சுமார் இருபத்தாறு மில்லியன் ரூபா செலவில் குறித்த வெளிநோயாளர் பிரிவுக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டது.

இதனையே வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றுத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வடமாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன், நாடாளுமன்ற உறுப்பினர் ச.சிவமோகன், வடமாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கேதீஸ்வரன், பிராந்திய சுகாதார சேவை உதவிப்பணிப்பாளர் வைத்தியகலாநிதி மகேந்திரன், வவுனியா வைத்தியசாலைப் பணிப்பாளர் கு.அகிலேந்திரன் மற்றும் வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர் உட்பட பலரும் கலந்த கொண்டிருந்தனர்.(அ)

# பதவி விலகல் அல்லவாம்!

கொழும்பு. பெப்.23,

பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் அமாரி விஜேவர்தன பதவி விலகியதாக வெளியான செய்தி தொடர்பில் வெளிவிவகார அமைச்சு விளக்கமளித்துள்ளது. அமாரி விஜேவர்தன பதவி விலகியுள்ளதாக ஊடகங்களில் வலம் வரும் அறிக்கை பிழையானதென்றும், அவர் தனது விருப்பின் பேரில் மார்ச் 31 ஆந் திகதியன்று ஒப்பந்த காலத்தை முடிவுறுத்தவுள்ளாதாகவும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் நியமிக்கப்பட்ட அமாரியின் பதவிக் காலம் மார்ச் 31ஆந் திகதியுடன் இரண்டாண்டை நிறைவு செய்யும் நிலையில் ஒப்பந்த காலம் முடிவுறுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# அடுத்த போகத்திலேயே உரமானியம்



கொழும்பு, பெப்.23.

அடுத்த போக ஆரம்பத்தின்போதே விவசாயிகளுக்கு தேவையான உரத்தை பெற்றுக் கொள்வதற்கான நிதியை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தேவையான உரத்தின் சந்தைப் பெறுமதிக்கு சமனான முழுமையான நிதியையும் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடுவதற்கு தீர்மானித்துள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் துமிந்த திசாநாயக்க கூறியுள்ளார்.

நெல், சோளம், சோயா, மிளகாய், பெரிய வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு போன்ற பயிர்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கே இந்த உர மானியம் வழங்கப்பட உள்ளது.

விவசாயத்துறை அமைச்சர் துமிந்த திசாநாயக்க, நிதியமைச்சர் மங்கள சமரவீர மற்றும் விசேட திட்டமிடல் அமைச்சர் சரத் அமுனுகம ஆகியோர் தேசிய பொருளாதார சபையில் ஜனாதிபதியின் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடி இந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

அதேவேளை அந்த அனைத்து விவசாயிகளுக்கும் ஒரு ஏக்கருக்கு 40,000 ரூபா பெறுமதியான இலவச காப்புறுதியும் வழங்கப்பட உள்ளதாக அமைச்சர் துமிந்த திசாநாயக்க கூறியுள்ளார். (இ)

# தீர்க்கப்படாத பிரச்சினைகளே தோல்விக்குக் காரணம்

கொழும்பு, பெப்.23,

சைட்டம் பிரச்சினை உள்ளிட்ட தீர்வு வழங்கப்படாத பல பிரச்சினைகளே அரசாங்கத்தின் தோல்விக்கு காரணம் என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார். நேற்று கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அமைச்சரவையை மாற்றியமைப்பது சம்பந்தமாக நடப்பது என்வென்பது பற்றி முழுமையாக எவருக்கும் தெரியாது என்றும், அது சம்பந்தமான அனைத்துத் தீர்மானங்களும் ஜனாதிபதியால் எடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.



'ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் எப்போதுமே கட்சித் தலைவருடனேயே இருந்துள்ளேன். நாளை வேறொரு தலைவர் நியமிக்கப்பட்டால் அவருக்கும் எனது ஒத்துழைப்பை வழங்குவேன்' எனவும் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார். (இ)

# மிரட்டல் பிரிகேடியர் விவகாரம் பிரிட்டன் தீவிரமாகப் பரிசீலிப்பு

லண்டன், பெப்.23

"லண்டனில் இலங்கைத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகர் பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ, தமிழ் ஆர்ப்பாட்டக்காரர்களை அச்சுறுத்தியதை பிரிட்டன் அரசாங்கம் மிகவும் தீவிரமாகக் கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளது . அதனாலேயே அவரை கொழும்பு திரும்புமாறு உத்தரவிடப்பட்டது" என்று பிரிட்டன் அமைச்சர் மார்க் பீல்ட் உறுதிப்படுத்தியுள்ளார்.

'எமது தெருக்களில் சிலர் வெறுப்பைத் தூண்டியுள்ளனர். அவர்கள் பொலிஸாரால் விசாரிக்கப்படுவர். அந்தக் குற்றம் தொடர்பாக பிரிகேடியர் விசாரிக்கப்படுவாரா?' என்று ஆசிய- பசுபிக் விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சரிடம், பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் கிளைவ் எபோர்ட் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு, ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சர் மார்க் பீல்ட் பதிலளிக்கையில், "பிரிட்டன் இந்தச் சம்பவத்தை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொண்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் இதுகுறித்துப் பேசியிருந்தேன். இலங்கை அரசாங்கம் இதனைத் தீவிரமாக எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகம் இல்லை.

குறித்த பாதுகாப்பு ஆலோசகரை கலந்துரையாடலுக்காக, லண்டனில் இருந்து உடனடியாக கொழும்பு திரும்புமாறு உத்தரவிட்டுள்ளதாகவும், சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டது என்றும், பிரிட்டன் அரசாங்கத்துக்கு இலங்கை அரசு தகவல் தெரிவித்துள்ளது" என்றும் அவர் கூறியுள்ளார். (அ)

## இன்று நாளும் கோளும்

23.02.2018 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் மாசி மாதம் 11 ஆம் நாள்

அட்டமி பகல் 10.09 மணி வரை | கார்த்திகை பகல் 10.27 மணி வரை | சித்தயோகம்

இராகுகாலம் 10.30 - 12.00 | சுபநேரம் மு.ப. 09.30 - 10.30 | எமகண்டம் மு.ப. 03.00 - 04.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வரவு | தாமதம் | செலவு | ஆதரவு | அசதி | வெற்றி | நன்மை | கவலை | ஆர்வம் | சிரத்தை | அமைதி | உயர்வு |

# பழமையான பீரங்கி திருமலையில் மீட்பு



கொழும்பு, பெப்.23

திருகோணமலையில் கட்டட நிர்மாணிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, பழமை வாய்ந்த பீரங்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

திருகோணமலை வைத்தியசாலையின் அவசர விபத்துப் பிரிவுக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக அத்திபாரம் வெட்டும் போதே இந்தக் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

கி.பி. 1700 ஆம் ஆண்டு காலத்தைச் சேர்ந்த பீரங்கியே இவ்வாறு மீட்கப்பட்டு, நேற்று முன்தினம் திருகோணமலை கடற்படை மற்றும் கடல்சார் அருங்காட்சியகத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்தப் பீரங்கி ஏனைய பீரங்கிகளை விடவும் முற்றிலும் வித்தியாசமானது எனவும், அதன் பின் பக்க பகுதி முழுமையாக மூடப்பட்டுள்ளதாக தொல்பொருளியல் உதவி இயக்குநர் சுமனதாஸ தெரிவித்துள்ளார்.

இந்தப் பீரங்கியின் நிறை 8 தொன் எனவும் 11 அடி நீளமானது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# வடமராட்சி கிழக்கு பாடசாலைகளுக்கு வடக்குக் கல்வியமைச்சர் திடீர் விஜயம்

யாழ்ப்பாணம், பெப்.23

வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள ஆறு பாடசாலைகளுக்கு வடமாகாணகல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் நேற்றுமுன்தினம் விஜயம் செய்து, குறித்த பாடசாலைகளின் நிலை பற்றி ஆய்வு செய்தார்.

இந்தப் பகுதியில் உள்ள மணற்காடுறோ.க.த.க.பாடசாலை, நாகர்கோவில் மகாவித்தியாலயம், கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க த.க. பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா ம.வி , உடுத்துறை ம.வி, உடுத்துறை றோ.த.க.பாடசாலை ஆகியவற்றுக்குத் தேவையான பௌதீக மற்றும் ஆசிரிய வளங்கள் தொடர்பில் நேரடி ஆய்வினை மேற்கொள்ளும் பொருட்டே இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இங்குள்ள ஒரு சிலபாடசாலைகளில் பெறுமதிமிக்க பௌதீக வளங்கள் பயன்படுத்தப்படாமலும், பராமரிக்கப்படாமலும் இருந்தமையும் இதன்போது அவதானிக்கப்பட்டது.

இவை தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வலயக் கல்விப் பணிப்பாளருக்கு பணிக்கப்பட்டுள்ளது. இவ் விஜயத்தின் போது அமைச்சருடன் பிரத்தியேக செயலாளர் ந.அனந்தராஜ், வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் நந்தகுமார் மற்றும் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் பிறேமகாந்தன் ஆகியோரும் சென்றிருந்தனர். (அ)

# மன்னார் வைத்தியசாலைக்கு மகப்பேற்று நிபுணர் நியமனம்

மன்னார், பெப்.23

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் முயற்சியால், மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் நீண்ட காலமாக மகப்பேற்று நிபுணர் இன்மையினால் மன்னார் மாவட்ட மக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகி வந்தனர். கர்ப்பிணித்தாய்மார்கள் சிகிச்சைகளுக்குக்காக பெரும் சிரமங்களுக்கு மத்தியில் நீண்ட தூரம் வேறு வைத்தியசாலைகளுக்கு பயணிக்க வேண்டியிருந்தது.

இது தொடர்பில் மன்னார் மாவட்ட மக்கள், செல்வம் அடைக்கலநாதன் எம்.பியின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தனர். இது தொடர்பில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் உரிய அதிகாரிகளுடன் செல்வம் எம்.பி கலந்துரையாடியிருந்தார். அவரின் வேண்டுகோளுக்கிணங்க உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவர் நுவரெலியா வைத்தியசாலையில் இருந்து மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (அ)

# ரயிலில் மோதி யானை சாவு

திருகோணமலை, பெப்.23

கொழும்பிலிருந்து -திருகோணமலை நோக்கி, நேற்று அதிகாலை பயணித்த ரயிலில் மோதுண்டு, யானையொன்று உயிரிழந்துள்ளது.

அக்போபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, கிதுல்உதுவ பகுதியில் வைத்தே, இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கந்தளாய் பிரதேசத்தில் மாத்திரம் இதுவரை, பத்துக்கும் மேற்பட்ட யானைகள் ரயிலில் மோதி உயிரிழந்திருப்பதாக, வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# இளைஞனைக் காணோம்



கொழும்பு, பெப்.23

மன்னார் தோட்டவெளி ஜோசேப்வாஸ் நகரைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த 14ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளதாக குறித்த இளைஞனின் பெற்றோர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மன்னார் விடத்தல் தீவைப் பிறப்பிடமாகவும், தோட்டவெளி ஜோசேப்வாஸ் நகரை வதிவிடமாகவும் கொண்ட பூபாலசிங்கம் அருள்ராஜ் (வயது-33) என்ற இளைஞரே காணாமல் போயுள்ளதாக கடந்த திங்கட்கிழமை மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த இளைஞன் சற்று மனநலம் பாதிக்கப்பட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. அந்த இளைஞன் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்குமாறு பெற்றோர் தெரிவித்துள்ளனர். (அ)

# குளத்துக்குள் நீந்திய ஓட்டோ!



கொழும்பு, பெப்.23

வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் உள்ள குளத்துக்குள் ஓட்டோ ஒன்று நேற்றுக்காலை பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் இருந்து வைரவப்புளியங்குளம் நோக்கி குளக்கட்டு வீதியால் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து, தடுமாறி விபத்துக்குள்ளானது. இதன்போது வைரவப் புளிங்குளம் பகுதியில் இருந்து பண்டாரிக்குளம் நோக்கி அவ் வீதி வழியாக வந்த ஓட்டோ, குறித்த மோட்டர் சைக்கிள் மீது மோதுவதைத் தவிர்ப்பதற்காக, முயன்ற போது, ஓட்டோ கட்டுப்பாட்டை இழந்து, குளத்துக்குள் பாய்ந்தது. எனினும் ஓட்டோச் சாரதி வெளியே பாய்ந்ததால் காயமேதுமின்றித் தப்பித்துக் கொண்டார். (அ)

செல்லமுத்துஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
பெருமையுடன் வழங்கும்
IDM ACHIEVERS SPORTS FIESTA
2018
2015 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் தேசிய ரீதியிலான
போட்டிகளில் குழுவாகவோ அல்லது தனியாகவோ
பாடசாலை ரீதியாகவோ அல்லது கழகங்களுக்கூடாகவோ
பங்குபற்றியவர்களுக்கான
சான்றிதழ்களும் 30,000/= ரூபாவிற்கான
IDM Nelliady Campusன் பரிசு கூப்பனும் வழங்கப்பட
உள்ளதால் வட. மாகாணத்தை சேர்ந்த தகுதியுடைய
வீரர்களை 076 868 6877 / 021 226 5959 எனும் இலக்கத்தில்
தொடர்பு கொள்ளவும்.


ஊடக அனுசரணை
எதிரொலி Ethiroli
IDM

# சுதந்திரக் கட்சியைக் காட்டிகொடுத்த மைத்திரி

கொழும்பு, பெப்.23



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பத்தாவது தடவையாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை காட்டிக் கொடுத்துள்ளார் எனக் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். "பத்தாம் தடவையாகவும் மைத்திரி, சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியிடம் காட்டிக் கொடுத்துள்ளார். பொது வேட்பாளராகப் போட்டியிட்ட போது முதல் தடவையாக மைத்திரி கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியிடம் காட்டிக் கொடுத்திருந்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளல், பெரும்பான்மை அதிகாரம் காணப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை கலைத்தல், சுதந்திரக் கட்சிக்கு பெரும்பான்மை பலமிருந்த போது ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக நியமித்தமை, பொதுத் தேர்தலில் மகிந்தவுக்கு பிரதமர் பதவி வழங்காமை, சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை இணைத்து அரசாங்கம் அமைத்தல், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலத்தில் சுதந்திரக் கட்சி ஆட்சி அமைக்கும் என மக்களை ஏமாற்றியமை, மீளவும் தேசிய அரசாங்கத்தை முன்னெடுப்பதாக அறிவித்தமை போன்ற காரணிகளில் சுதந்திரக் கட்சியை ஜனாதிபதி காட்டிக் கொடுத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த அனைத்தும் புலம்பெயர் தமிழர்களதும் சர்வதேச சமூகத்தினதும் தேவைக்கு ஏற்ற வகையில் செயற்பட்டு வருகின்றார். கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் தங்களது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். மக்களின் இந்த ஆணையை ஏற்றுக் கொண்டு அரசாங்கம் உடனடியாக பொதுத் தேர்தலை நடத்த வேண்டும். இன்னும் ஒரு மாத காலத்தில் கடுமையான தீர்மானம் எடுப்பதாகக் கூறி ஜனாதிபதி அடக்குமுறைகளை பின்பற்றி வருகின்றார்" எனவும் பிரசன்ன ரணதுங்க குற்றம் சுமத்தியுள்ளார்.(அ)

## எதிர்காலத்தில் 'டெப்' வழங்குவோம்

கொழும்பு, பெப்.23

உயர்தர மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்காகவும் 'டெப்' வழங்கும் அரசாங்கத்தின் திட்டமானது இடைநிறுத்தப்பட்டமை தற்காலிகமானது, என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பொருளாரதாரத் துறையில், அவதானத்தைச் செலுத்தும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும், எதிர்காலத்தில் டெப் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(அ)

## சைட்டம் மாணவர்கள் கொத்தலாவல பல்கலையில்!

கொழும்பு, பெப்.23

மாலபே; சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களைக் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கு இணைத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரியில் தற்போது கல்வி கற்றுவரும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் அடிப்படைத்தகைமைகள்பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் அவர்களை இவ்வாறு இணைத்துக் கொள்வதற்கும் இந்தக்கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் சட்டமா அதிபர், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக் கழகத்தின் உபவேந்தர், கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதி மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட குழுவினர் பங்குபற்றினர். (அ)

## தேசிய அரசுக்கு ஒப்பந்தம் தேவையில்லை

கொழும்பு, பெப்.23

தேசிய அரசாங்கத்துக்கு ஒப்பந்தம் அவசியமில்லையென சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன நேற்று எழுப்பிய வாய்மூல கேள்விக்கு பதிலளிக்கும் போதே சபாநாயகர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இதுதொடர்பில், தான் சட்டபிரிவிடம் விசாரித்ததாகவும், அவர்களின் கருத்துக்கமைய, ஒப்பந்தம் தேவையில்லை என்றும் சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## கடத்தல் கைக்குண்டே பஸ்ஸில் வெடித்தது

கொழும்பு, பெப்.23

தியத்தலவா கஹாகொல்ல பகுதியில் பஸ்ஸில் குண்டு வெடித்தமைக்கு காரணம், சிப்பாய் ஒருவர் கைக்குண்டு ஒன்றைக் கடத்த முயன்றமையே எனத் தெரியவந்துள்ளது .

நேற்றுமுன்தினம் காலை 5.45 மணிக்கு கஹாகொல்ல என்னும் இடத்தில்பஸ்ஸில்ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் படைவீரர்கள் உள்ளிட்ட 19 பேர் காயமடைந்திருந்தனர்.

இந்த வெடிப்புச்சம்பவம் யாழ்ப்பாண இராணுவ முகாம் ஒன்றில் கடமையாற்றும் சிப்பாய் ஒருவரினால் கடத்தப்பட்ட கைக்குண்டு ஒன்று தவறுதலாக வெடித்ததாலேயே ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சிப்பாய், தனது காற்சட்டை பொக்கட்டில் மறைத்து வைத்து இந்த கைக்குண்டையாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு வந்துள்ளார். தியத்தலாவையில் பஸ்ஸில் பயணித்த போது காற்சட்டை பொக்கட்டில்இருந்த கைக்குண்டை எடுத்து, தனது பயணப் பொதிக்குள் வைக்க அவர் முயற்சித்த போது குண்டின் பாதுகாப்பு வளையம் கழன்று, குண்டு கீழே வீழ்ந்து இந்த விபத்து நேர்ந்துள்ளது. சம்பவத்தை நேரில் பார்த்த இரண்டு பேர் இது பற்றி சாட்சியமளித்துள்ளனர். இந்த குண்டு வெடிப்பு காரணமாக, கைக்குண்டை கொண்டு வந்ததாக சந்தேகிக்கப்படும் சிப்பாயின் பாதமொன்று வெட்டி அகற்றப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் இராணுவத்தினரும், பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(அ)

## சாகலவுக்கு உயர்கல்வியமைச்சு?



கொழும்பு, பெப்.23

கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சரொருவரின் அமைச்சுப் பதவியைப் பறித்து, மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சரொருவருக்குக் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக, தகவல் வெளியாகியுள்ளது.


இந்தச் செயற்பாட்டுக்கு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தி உள்ளாரெனவும், ஏதாவது பிரச்சினைகள் ஏற்படுமாயின் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம் என ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அந்தத் தகவல் தெரிவிக்கின்றது.

அதற்கு, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். இதனால், அந்தக் கட்சிக்குள் பனிப்போர் மூண்டுள்ளதாக அறியமுடிகின்றது. கண்டி மற்றும் மாத்தறை ஆகிய இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் இருவரில், கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சரின் விடயதானத்தையே இவ்வாறு மாற்றிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அறியமுடிகின்றது.

மாத்தறையைச் சேர்ந்த சட்டம், ஒழுங்குகள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரத்நாயக்க, தன்னுடைய அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்யவுள்ளாரென, கடந்த14ஆம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தெரிவித்திருந்தார்.

அவருக்கே, கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த, உயர்க்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்லவிடமிருந்து, நெடுஞ்சாலைகள் அமைச்சை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இந்தச் செயற்பாடுகளுக்கே, ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளனரென, அறியமுடிகின்றது. (அ)



## ஈணவும் விடார். நக்கவும் விடார். அவர் யார்?

ஒண்டிலையும் உண்மை இல்லை. இப்ப சனம் யோசிக்கிறது எப்பிடிக் குறுக்கு வழியிலை அலுவலைச் செய்து முடிக்கலாம் எண்டுதான். சும்மா சொல்லுவம் ஓராள் ஒரு வேலையா டீ எஸ் ஒபிசுக்கோ அல்லது வேறை எங்கையாச்சும் போயினம் எண்டு. உடனை அங்கை போய் தனக்கு தெரிஞ்ச ஆராச்சும் இருக்கினமோ எண்டு தலையை நீட்டித் தேடுறது. இல்லாட்டி ஐஞ்சைப் பத்தைக் குடுத்துச் சமாளிக்கலாமோ ஏண்டு பாக்கிறது. சட்டத்தின்படி செய்யத் தெண்டிக்கிறேல்லை. அதுக்கு விருப்பமுமில்லை

நேற்றைக்குப் பேப்பர் கடையிலை உதுதான் அமளி. சக்சேரியிலை வேலை செய்யிற தம்பியும் முதலியும் உதாலை கொளுவப்படப்பாத்தினம். என்னெண்டால் வட மாகாண சபையிலை வேலைக்கு ஆக்களை எடுக்கப் போகினம் எண்டு ஓராள் கதைக்க, முதலி சொன்னான் உது தேவை இல்லாத வேலை, உவை என்னத்தை வெட்டி விழுத்தினவை? இருக்கிற ஆக்களை வைச்சுச் சமாளிக்கத் தெரியாதோ? சும்மா தமிழனை ஏமாத்திறதுக் கெண்டு இந்தியா கொண்டு வந்த சுயாட்சி எண்ட "பாப்பிள்ளை" தானே உது. அதுக்கெண்டு ஒரு சபை, முதலமைச்சர், கட்டிடம், வேலைகாரார், வாகனங்கள், எடுபிடியள் எண்டு எத்தின கோடி செலவாகுது. தெரியுமே? இந்த சின்ன நாட்டுக்கு மாகாண சபை, பிறகு ஊராட்சிச் சபை, அந்தச் சபை, இந்தச் சபை எண்டு கனக்க, என்னத்துக்கு உதெல்லாம். கடைசியா ஆக்களுக்கு வேலையளையும் குடுத்து அவைபாட்டுக்கு அடிக்கவும் பழக்கிக் கிடக்கு. இருந்த நிர்வாகங்களைப் பிரிச்சுக் குடுத்து உங்களுக்கை அடிபட்டுச் சாவுங்கோ எண்டு விட்டுக்கிடக்கு.

அழுகிற பிள்ளைக்குக் கொஞ்ச விளையாட்டுச் சாமாங்களைக் குடுத்துப் பிராக்காட்டிற மாதிரி உந்த "சபையள்" விளையாட்டு. இப்ப உள்ளூராட்சிச் சபைத் தேர்த்தல் வைச்சு என்னத்தைக் கண்டவை. பலருக்கு ஆபத்தும்வந்திருக்கு. பலர் ஒழிக்கிற இடமாவும் உள்ளூராட்சிச் சபையையை ஆக்கியிருக்கு. அதுதான் கண்ட மிச்சம்.

நிர்வாகங்களைப் பிரிச்சுக் குடுக்கிறது ஏனெண்டு தெரியுமே? முதலாவது நிர்வாகம் நல்லா நடக்க வேணும் எண்டதுக்கு. மற்றது சனத்துக்கு வடிவா சேவை செய்யவும், அவைக்கு அவையின்ரை அடிமட்டம் வரைக்கும் அரச சேவையள் போய் சேரவேணும் எண்டதுக்குந்தானே ஒழிய வேறை விளையாட்டு விளையாட இல்லை. இது பாத்தால் அதை வைச்சுத்தான் முழு அரசியலும். கட்சி வளக்கிறது, தெரிஞ்ச சனத்துக்கு வேலைவெட்டி குடுக்கிறது. தெரிஞ்ச சனத்துக்கும் தன்ரை இடத்துக்குச் சாமான் சக்கட்டுக் குடுக்கிறது எண்டு பல விளையாட்டு இப்ப நடக்கிது.

எங்கடை மாகாண சபையை வைச்சு நடந்த அரசியல் ஒரு தனிக் கதை. பிள்ளையார் பிடிக்கப் போய் அது குரங்கா வந்த கதை. தங்கடை புலுடா முதலமைச்சரிட்டை வாய்க்கேல்லை எண்டு கண்ட உடனை முதலமைச்சருக்குச் சார்பான அமைச்சர்மாரிலை ஊழல் குற்றச் சாட்டு வைச்சினம். முதலமைச்சரிலை கரி பூசுற விளையாட்டை செய்ய வெளிக்கிட்டு இப்ப என்ன நடந்திது. முதலமைச்சருக்கு கெண்டு ஒரு அணியை அவையே உண்டாக்கிக் குடுத்திருக்கினம். கட்சிக்கை நடந்த குளறுபடியளையும், வட மாகாண சபையிலை செய்த குளறுபடியளையும் பாத்துத் தான் கூட்டமைப்பைச் சனம் பழி வாங்கினது. சனத்தின்ரை காசைக் கண்டபடி செலவழிச்சு, காசைக்' கரியாக்கிச் சனத்துக்கு வடிவாச் சேவை செய்யாமல் சனத்தைப் பழி வேண்டினதுக்குச் சனம் உவையைப் பழிவாங்கிப் போட்டுதுகள் எண்டுதானே கதையாக் கிடக்கு.

நல்லதுக்குத்தான் எல்லாம் நடக்கிதெண்டு பாத்தால் சகல காரியங்களும் கேலவமாத்தான் கிடக்கு. எங்களுக்குள்ளை எத்தினை நல்ல அதிகாரியள் இருக்கினம்! அவையைப் பாவிச்சு எவ்வளவு நல்ல காரியங்களைச் செய்யலாம். ஆனாலும் இடைக் கேள்வி எல்லா அரச காரியாலயங்களிலையும் சில இழுத்துவிழுத்திற கேஸ்கள் இருக்கினமாம். அவை தங்கடை சுய நலத்துக்காக நல்லவையையும், நேர்மையா வேலை செய்யிறவையளையும் ஒழுங்கா இருக்க விடாமல் கோழ், குண்டணி சொல்லிக் குழப்பிறதும், அவையின்ரை குலம், கோத்திரம், குடும்பக் கதையளைச் சொல்லி உவரைப் பற்றி எங்களுக்குத் தெரியாதோ? அப்ப என்ன செய்தவர், இப்ப என்ன செய்யிறார் எண்டு ஈணவும் விடாமல், நக்கவும் விடாமல் விளையாட்டு விடுகினமாம். பாப்பம் உவையின்ரை சேட்டையை?

**- வில்லங்கம் விநாசி**

# லீசிங் கட்டதாவரின் சொத்துகள் பறிமுதல்

யாழ்ப்பாணம், பெப்.23

யாழ்ப்பாணத்திலுள்ள நிதி நிறுவனம் ஒன்றில் லீசிங் அடிப்படையில் 'ஹைஏஸ் 'வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்துவிட்டு, நிலுவைக் கொடுப்பனவை செலுத்தத் தவறியவரின் உடமைகளைப் பறிமுதல் செய்யுமாறு கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றம் கட்டளை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள நிதி நிறுவனம் ஒன்றில் லீசிங் அடிப்படையில் ஹைஏஸ் வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்த நபர் நிலுவைப் பணமாக 8 இலட்சம் ரூபாவை செலுத்தத் தவறியுள்ளார். அதற்கான அவகாசத்தை நிதி நிறுவனம் வழங்கியபோதும் அவர் அதனைச் செலுத்தவில்லை.

இதனால் நிதி நிறுவனத்தால் கொழும்பு மேல் நீதிமன்றில் எழுத்தாணை மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அதன் மீதான விசாரணை இடம்பெற்று வந்த நிலையில் எதிர் மனுதாரரின் சொத்துடமைகளைப் பறிமுதல் செய்ய நீதிமன்றம் கட்டளை வழங்கியது. அந்தக் கட்டளையை நிறைவேற்றுமாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளருக்கு மன்று பணித்தது.

இந்த நிலையில் எழுத்தாணை மனுதாரரான நிதி நிறுவனம், யாழ்ப்பாணம் பொலிஸார், நீதிமன்ற உத்தியோகத்தர்களுடன், எதிர் மனுதாரர் வதியும் இல்லத்துக்குச் சென்ற யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றப் பதிவாளர், எழுத்தாணைக் கட்டளையை நிறைவேற்றினார்.

எதிர் மனுதாரரின் வீட்டிலிருந்த தளபாடங்கள் கணக்கிடப்பட்டு நிதி நிறுவனத்துக்கு அறிக்கை வழங்கப்பட்டது. அவரிடம் தற்போதுள்ள தளபாடங்களின் பெறுமதி 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## இன்றைய கேலிச்சித்திரம்

அமைச்சரவையில் இன்று மாற்றம்...



# சம்பந்தனின் பதவி பறிபோகும்

## சிவஞானம் சொல்கிறார்

யாழ்ப்பாணம், பெப்.23,

சம்பந்தனின் எதிர்க்கட்சி தலைவர் பதவி பறிக்கப்படவுள்ளதாக வட மாகாணசபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள தனது அலுவலகத்தில் அவர் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

தென்னிலங்கை அரசியலில் உள்ளூராட்சிமன்ற முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு, சம்பந்தனின் எதிர்க்கட்சி தலைவர் பதவியை பறிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகவும், உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகளை அடுத்து நாடாளுமன்ற தேர்தலை உடனடியாக நடத்துமாறு எதிர்க்கட்சிகள் கூச்சலிடுவது பொருத்தமானது அல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அதிக ஆசனங்களை பெற்ற இடங்களில் ஆட்சியமைக்க ஏனைய கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார். (இ)

# விளையாட்டு வினையானது

வடமராட்சி, பெப்.23

உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் ஏற்பட்ட தர்க்கம் கைகலப்பில் முடிந்ததால், வீரர் ஒருவர் தலையில் காயமடைதுள்ளார்.

கரவெட்டி பிரதேச செயலகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின் ஒரு அங்கமான உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டி, இமையாணன் விளையாட்டு கழக மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, போட்டியில் ஈடுபட்ட இரு அணி வீரர்களுகிடையே எழுந்த முரண்பாடு, மைதானத்தினுள் கைகலப்பாக மாறியது. இந்தக் கைகலப்பில் தலைக்கவசத்தினால் வீரர் ஒருவர் தாக்கப்பட்டு காயமடைந்தார். அவர் உடனடியாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டார். அவரை உடனடியாகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு பொலிஸார் பணித்தனர். (அ-11)

## தொடர்ச்சிகள்

### வாக்குறுதியை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சம்பந்தன் கோரிக்கை விடுத்தார்.

இலங்கை வந்துள்ள அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஜேம்ஸ் சென்ப்ரெக்னெர் மற்றும் அவரது தலைமை அதிகாரி மட்பை சென்ஸேனிஸ் ஆகியோர் எதிர்க்கட்சி தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனை நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் போது அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் தொடர்பிலும் அதன் பின்னர் உள்ள அரசியல் நிலைமை தொடர்பிலும் சம்பந்தன் எடுத்துரைத்தார். புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தொடர்பில் கருத்து தெரிவித்த சம்பந்தன் ,இந்த நடைமுறைகள் முன்னெடுக்கப்பட்டு சாதகமான முடிவினை எட்டவேண்டும் எனத் தெரிவித்த அதேவேளை புதிய அரசியலமைப்பானது சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களின் ஆணையை பெறவேண்டியதன் அவசியத்தினையும் வலியுறுத்தினார்.

“இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட மனித உரிமைப் பேரவையின் தீர்மானத்தினை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளது. இந்த தீர்மானத்தினை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு தாமதப்படுத்தி வருகின்றது. எனவே இலங்கை அரசாங்கம் சர்வதேசத்துக்கும் இலங்கை மக்களுக்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதனை சர்வதேச சமூகம் உறுதிசெய்யவேண்டும்" எனவும் காங்கிரஸ் உறுப்பினரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இந்தச்சந்திப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரனும் கலந்து கொண்டிருந்தார் . (அ)

### உள்ளூராட்சி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புக்களுக்குப் பொருத்தமான அங்கத்தவர்களை வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்யும் அதிகாரம் உள்ளூராட்சி ஆணையாளருக்கு வழங்கப்படுகிறது. இந்த வாக்கெடுப்பின் இயல்பு பற்றி அங்கத்தவர்கள் தீர்மானிக்க வேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய சட்டங்களின் பிரகாரம் உள்ளூராட்சி அங்கத்தவர்கள் கட்சி தாவமுடியாது. 25 சதவீத பெண் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இதில் ஏதேனும் நடைமுறைச் சிக்கல் இருக்கும் பட்சத்தில் எதிர்கால உள்ளூராட்சி தேர்தல்களில் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்று அமைச்சு விடுத்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ)

### கோத்தா... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைத் திருப்பி அனுப்பினர்.

இதையடுத்து வேறு பாதை ஊடாக நில அளவையாளர்கள் இராணுவ முகாமுக்குள் சென்றனர். இதை அறிந்த மக்கள் இராணுவ முகாமில் இருந்து நில அளவையாளர்கள் வெளியேறி, நில அளவீட்டை நிறுத்த வேண்டும் எனவும், மாவட்ட செயலாளர் இங்கு வந்து இது தொடர்பில் உத்தரவாதம் அளிக்கவேண்டும் எனவும் கோரி வட்டுவாகல் பாலத்தை மறித்து வீதியில் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பரந்தன் முல்லைத்தீவு வீதி போக்குவரத்து வட்டுவாகல் பகுதியில் தடைப்பட்டது. ஆயினும் அம்புலன்ஸ் வண்டிகளை மட்டும் வீதி ஊடாகச் செல்ல போராட்டக்காரர்கள் அனுமதித்தனர்.

இந்நிலையில், மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.பிரணவநாதன் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களைச் சந்தித்து நில அளவையைக் கைவிடுவதாக தெரிவித்தார். எனினும் நில அளவையைக் கைவிடுவதாகவும், முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடப்படும் என எழுத்து மூலமாகத் தெரிவித்தால் மட்டுமே போராட்டம் கைவிடப்படும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பான உத்தரவாதம் கரைத்துறைப்பற்று பிரதேச செயலரின் கையொப்பத்துடன் வழங்கப்பட்டதை அடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

இந்த போராட்டத்தில் வடமாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன், எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

குறித்த காணியை கடற்படையினரின் தேவைக்காக சுவீகரிக்கும் முயற்சிகள் பல தடவைகள் மேற்கொள்ளப்பட்ட போதும், பொதுமக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

### பெற்றோல்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளதாகப் பரவிய வதந்தியால், யாழ்ப்பாணத்தில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்னால் பொதுமக்கள் பெற்றோல் வாங்க நேற்று முண்டியடித்தனர். பல இடங்களில் நீண்ட வரிசையில் நின்று அவர்கள் பெற்றோலை வாங்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

திடீரென பலர் வழக்கத்தை விடவும் அதிகளவில் பெற்றோலைக் கொள்வனவு செய்ததால், பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று மதியத்துக்குப் பின்னர், பெற்றோல் முடிவடைந்து, 'பெற்றோல் இல்லை' என்ற அறிவிப்புப் பலகையையே காண முடிந்தது. ஆயினும் மாலையில் நிலைமை ஓரளவு சுமுகத்தை எட்டியது. (அ)

### வடக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தில் உள்ள குறைபாடுகளினால், குறைந்தது 10 உள்ளூராட்சி சபைகளில், பெண்களுக்கான 25 வீத இடங்களை ஒதுக்கீடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சட்டத்தின்படி, உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கு 25 வீத இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும். இந்த 10 சபைகளிலும் பெண் வேட்பாளர்களை நியமிப்பதில் சிக்கல்கள் எழுந்துள்ளன.

வட்டார முறையில் ஒரு அரசியல் கட்சியின் சார்பில் ஆண் வேட்பாளர்கள் மாத்திரம் வெற்றி பெற்றிருந்தால், அந்தக் கட்சிக்குக் கிடைத்த விகிதாசார அடிப்படையிலான ஆசனங்களைப் பெண்களுக்கு ஒதுக்க வேண்டும். எனினும், 3 ஆசனங்களுக்குக் குறைவான ஆசனங்களைப் பெற்ற கட்சிகள், பெண்களை விகிதர்சார முறையில் நியமிக்க வேண்டியதில்லை.

“பெண்களுக்கு 25 வீத இடங்களை ஒதுக்க முடியாத நிலையில் உள்ள 10 உள்ளூராட்சி சபைகளுமே, வடக்கு கிழக்கில் தான் உள்ளன. சாத்தியமானளவுக்கு பெண்களுக்கான 25 வீத ஒதுக்கீட்டை உறுதிப்படுத்த முயற்சிப்போம். இல்லா விட்டால் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது” என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ)

### தேசிய... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரமன்றி சில வெளிநாடுகளுக்கும் தலையிடியாகவே அமைந்துள்ளன. மகிந்தவின் கை ஓங்கினால் இலங்கை மீதான தமது ஆதிக்கம் குறைந்துவிடும் என்று அந்த நாடுகள் அஞ்சுகின்றன.

குறிப்பாக,இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு பெரும் கவலை ஏற்பட்டுள்ளது. இந்த நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்களுக்கு குந்தி இருக்கவும் நேரமில்லை.அங்குமிங்கும் ஓடித் திரிகின்றனர்.அலரி மாளிகைக்கு ஓடுவதும் அங்கிருந்து ஜனாதிபதி மாளிகைக்கு ஓடுவதும் என இவர்கள் கடும் உழைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தேசிய அரசு சரிந்துவிடக்கூடாது என்பதில் இந்த நாடுகள் உறுதியாக இருக்கின்றன. இந்த முயற்சியை நாங்கள் முறியடிப்போம். மக்கள் இந்த அரசை விரும்பவில்லை.இந்த அரசின் ஆட்டமெல்லாம் இன்னும் 18 மாதங்களுக்குத்தான்.அதன் பின் தேர்தல் வந்துவிடும். அரசை மக்கள் வீட்டுக்கு அனுப்பிவிடுவர்” என்றார்.(இ)

### கிளிநொச்சியில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவரது சடலம் புதுமுறிப்புக்குளத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

• இவரது மரணம் விபத்தால் ஏற்படவில்லை எனவும், சிலரால் அவர் கொலை செய்யப்பட்டே இந்தக் குளத்தில் அவரின் சடலம் வீசப்பட்டுள்ளதாகவும் உறவினர்கள் சந்தேகிக்கின்றனர். இது குறித்து கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

### புகைப்பட... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அச்சுறுத்தும் வகையில், போராட்டக்காரர்களை கடற்படையினர் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தினர். எனினும் அதைப் பற்றி சிறிதும் கவலையின்றி மக்கள் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர். (அ)

# தன் வாயால் கெட்ட செயலர்



புளோரிடா, பெப்.23


அமெரிக்காவின் புளோரிடாவில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில், இரண்டு மாணவர்கள்மீது தவறாகக் குற்றம் சாட்டிய மாகாணச் செயலர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

"துப்பாக்கிச் சூடு குறித்து பேட்டியளித்த மாணவர்கள் உண்மையான மாணவர்கள் அல்லர். அவர்கள் நடிகர்கள், எங்கு துக்க நிகழ்ச்சிகள் நடைபெற்றாலும் அங்கு சென்று இவ்வாறு நடிப்பது இவர்கள் வழக்கம்" என்று பெஞ்சமின் ஹீலி என்னும் புளோரிடா மாகாணச்செயலர் தெரிவித்திருந்தார்.

ஏற்கனவே பிள்ளைகளைப் பறிகொடுத்த துக்கத்தில் இருக்கும் மக்களுக்கு இந்தக் கருத்து ஆத்திரத்தை ஊட்டியது.

இந்த நிலையில் மாகாண செயலரின் கருத்துக்கு தான் வருத்தம் தெரிவிப்பதாகவும், துக்கத்தில் இருக்கும் மக்களின் மனங்களைப் புண் படுத்தும் விதத்தில் பேசிய மாகாணச் செயலர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனவும் மாகாண 'ஆளுநர் அறிவித்துள்ளார் .(அ)

# ஆசிரியர்களுக்கு இனிமேல் துப்பாக்கி



வோஷிங்டன், பெப்.23

ஆசிரியர்களிடம் துப்பாக்கி இருப்பதன் மூலமே, பாடசாலைகளில் இடம் பெறும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களைத் தவிர்க்க முடியும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின், புளோரிடா மாநிலத்தில் கடந்த வாரம் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் 17 பேர் கொல்லப்பட்டனர்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்கள், இம்மாதிரியான சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் இருக்க கேட்டுக் கொண்டதையடுத்த டிரம்ப் ஆசிரியர்களுக்குத் துப்பாக்கி வழங்கச் சிபார்சு செய்துள்ளார்.

"துப்பாக்கி வாங்குபவர்களின் பின்னணி தீவிரமாக ஆராயப்படும். மேலும் அவர்களின் மனநலம் குறித்தும் கண்டறியப்படும்" என்றும் டிரம்ப் தெரிவித்தார். வெள்ளை மாளிகையில் பாதிக்கப்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்தபோதே டிரம்ப் இதனைத் தெரிவித்தார். (அ)



# பஸ் பள்ளத்தில் வீழ்ந்து 44 பேர் நசுங்கிப் பலி

பெரு, பெப்.23

பெரு நாட்டில் பஸ் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து 300 அடி ஆழத்தில் சரிந்து விழுந்ததில் 44 பேர் உடல் நசுங்கி உயிரிழந்துள்ளனர்.

குறித்தகோர விபத்துச் சம்பவம், ஒசோனாப் பகுதியில் அமைந்துள்ள நெடுஞ்சாலையின் ஆபத்தான வளைவுப் பகுதியில் நடந்துள்ளது. இதன்போது, பஸ் நசுங்கிச் சின்னாபின்னமாகியுள்ளது.விபத்து நடந்த பகுதிக்கு அருகாமையில் ஆறு ஒன்று ஓடுவதால், உடல்கள் அந்த ஆற்றில் அடித்துச் செல்லப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்

இதனிடையே மீட்பு குழுவினர் ஆற்றில் குதித்து உடல்களை மீட்டு கரை சேர்த்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.300 அடி ஆழத்தில் பஸ் விழ்ந்துள்ளதால் உடல்களை மீட்டு மருத்துவமனை சேர்க்கும் பணி கடுமையாக உள்ளது.

இதுவரை 44 பேர் உயிரிழந்துள்ளதாக அதிகாரிகள் தரப்பு உறுதி செய்துள்ள போதும், பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

கடந்த மாதம் இதே போன்றதொரு பஸ் விபத்தில் சிக்கி சுமார் 50 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது. (அ)

# விமானிகளும் வேலைநிறுத்தம்




பரிஸ், பெப்.23

ஊதிய உயர்வு கோரி இன்று பிரான்ஸ் விமான நிறுவன ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளதால் பல விமானங்கள் ரத்துச் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் இதனால் பாதிப்புக்குள்ளாவார்கள்.விமானிகளும், இதர ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளதால் பரிஸிலிருந்து புறப்படும் 50 சதவீதமான் விமானங்கள் ரத்து செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெரும்பாலான விமானங்கள் செயற்படும் என பிரான்ஸ் விமான நிறுவனம் அறிவித்திருந்தாலும், பயணிகள் தங்கள் பயணங்களை பெப்ரவரி 27 ஆம் திகதி வரை தள்ளி வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கு மேலதிக கட்டணம் எதுவும் வசூலிக்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.விமான சேவையில் தாமதங்கள் நேரிடலாம் என்றும் விமான நிறுவனம் தெரிவித்துள்ளது. 6 சதவீத சம்பள உயர்வைக் கோரியே விமானிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர். (அ)

# பறிபோகும் பதவி



இஸ்லாமாபாத், பெப்.23

'அரசியல் சட்டத்தின், 62 ஆம் மற்றும், 63 ஆவது பிரிவின் கீழ் தகுதி நீக்கம்' செய்யப்பட்ட ஒருவர், ஒரு கட்சியின் தலைவராக இருக்க முடியாது' என, பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இதையடுத்து, பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவராகச் செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் பிரதமராக இருந்த, நவாஸ் ஷெரீப், 'பனாமா பேப்பர்ஸ்' ஊழலில் சிக்கியதையடுத்து, அவரைப் பதவி நீக்கம் செய்து, அந்நாட்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. எனினும், பாகிஸ்தானை ஆளும் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவராக நவாஸ் ஷெரீப் தொடர்ந்து செயற்பட்டு வந்தார்.

இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில், அவாமி முஸ்லிம் லீக் உட்பட பல கட்சிகள், மனுத் தாக்கல் செய்தன. இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம், 'அரசியல் சட்டத்தின், 62 ஆம் மற்றும், 63 ஆவது பிரிவின் கீழ் தகுதி நீக்கம் செய்யப்பட்ட ஒருவர், ஒரு கட்சியின் தலைவராக இருக்க முடியாது' எனத் தீர்ப்பளித்தது.

இயைதடுத்து, பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்தும், நவாஸ் ஷெரீப் நீக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. (இ)

# அதிக நிதி வேண்டும்



பெர்லின்,பெப்.23

அதிக அளவு அகதிகளை ஏற்றுக்கொள்ளும் நாடுகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் அதிக உதவித்தொகை அளிக்க ' வேண்டும் என ஜேர்மனி கோரிக்கை விடுத்துள்ளது.

2015 க்கூப் பின்னர் அகதிகளை ஏற்றுக்கொள்ள ஹங்கேரி, போலந்து மற்றும் சில நாடுகள் மறுத்துவிட்டன, எனினும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் இருந்து இந்த நாடுகள் அதிக உதவித் தொகையை பெறுகின்றன. இந்த நிலையில் புலம்பெயர்தல் மற்றும் சட்ட விதிகள் உட்பட ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய கொள்கைகளை மதிக்கும் நாடுகளுக்கே ஐரோப்பிய ஒன்றியத்தின் அடுத்த பட்ஜெட்டின்பெரும்பகுதிவழங்கப்பட வேண்டும் என்று ஜேர்மனி விரும்புகிறது. இதுவரை ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள மக்களின் கல்வி மற்றும் பயிற்சிக்காகவும், உட்கட்டமைப்பு திட்டங்களுக்காகவும் அதிகம் செலவிடப்பட்ட உதவித்தொகை இனி வேறு திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதே ஜேர்மனியின் திட்டம். எனவே இனிமேல் அதிக நிதியுதவியை வழங்கவேண்டும் என ஜேர்மனி எதிர்பார்க்கின்றது. (அ)

# எந்தப் பக்கமும் சாயோம்

கமல் சூளுரை

மக்கள்
நீதி
மய்யம்



மதுரை,பெப்.23

தனது புதிய கட்சியின் சின்னம், கொடி என்பன குறித்து கமல்ஹாசன் விளக்கம் அளித்துள்ளார்.

மதுரை ஒத்தக்கடை பொதுக்கூட்டத்தில் கமல் தன் கட்சியின் பெயர் 'மக்கள் நீதி மய்யம்' என்று நேற்றுமுன்தினம் அறிவித்தார். அதற்குப் பிறகு கமல்ஹாசன் பேசுகையில், "கட்சியின் கொடியை உற்றுப்பார்த்தால் புதிய தென்னிந்தியாவின் வரைபடம் தெரியும். ஆறு கைகள் ஆறு மாநிலங்களைக் குறிக்கும். நடுவில் இருக்கும் நட்சத்திரம் மக்களாகிய நீங்கள்தான். மக்களையும் நீதியையும் மய்யமாகக் கொண்டு இணைக்கும் கட்சி என்பதால் மக்கள் நீதி மய்யம் என்று பெயர் வைத்திருக்கிறோம்.

தராசின் நடுமுள் நாம். எந்தப் பக்கமும் சாயமாட்டோம். நீங்கள் வலதா, இடதா என்று கேட்கிறார்கள். அதனால்தான் கட்சியின் பெயரிலேயே மய்யம் என்று வைத்திருக்கிறோம்" என்றார் கமல். (அ)

# ஒரே தொடரில் முதலிடம்



வெலிங்டன், பெப்.23

இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து ஆகிய அணிகள் பங்கேற்ற முத்தரப்பு ரி-20 கிரிக்கெட் தொடரைக் கைப்பற்றியதால், ஐ.சி.சி. தரவரிசையில் 7 ஆம் இடத்தில் இருந்து முதலிடத்துக்கு அவுஸ்ரேலியா முன்னேறியுள்ளது.

நியூஸிலாந்தில் நடைபெற்ற இந்த முத்தரப்பு ரி-20 தொடரின் இறுதிப்போட்டியில், அவுஸ்திரேலிய அணி, நியூஸிலாந்தை வீழ்த்தி தொடரைக் கைப்பற்றியது.

இந்த வெற்றியின் மூலம் -ஒரே தொடரில் - தரவரிசையின் கடைசி இடத்தில் இருந்து முதல் இடத்துக்கு முன்னேறி அவுஸ்ரேலியா சாதனை படைத்துள்ளது. அவுஸ்ரேலியா முதன் முதலாக ஐ.சி.சி ரி-20 தரவரிசையில் தற்போதுதான் முதல் இடம் பிடித்துள்ளது. மேலும் பாகிஸ்தான் மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய இரண்டு அணிகளுமே ஐ.சி.சி ரி-20 தரவரிசையில் முதல் இடத்தைப் பகிர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)





# கிளாசன் அதிரடி இந்தியா தோல்வி

செஞ்சூரியன், பெப்.23

இந்தியாவுக்கு எதிரான 2 ஆவது ரி-20 போட்டியில், 6 விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றுள்ளது. இந்தியா- தென்னாபிரிக்கா அணிகள் மோதிய 2 ஆவது 'ரி- 20' போட்டி செஞ்சூரியன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாரிக்கா முதலில் பந்து வீச்சைத் தெரிவு செய்தது.

இந்தியா சார்பில் தொடக்க ஆட்டக்காரர்களாக ஷிகர் தவானும், ரோகித் சர்மாவும் களமிறங்கினர். இரண்டாவது ஓவரின் முதல் பந்திலேயே ரோகித் சர்மா அவுட்டாகி இந்தியாவுக்கு அதிர்ச்சி அளித்தார். அவரைத் தொடர்ந்து சுரேஷ் ரெய்னா இறங்கினார். தவானும் ரெய்னாவும் இணைந்து அதிரடியாக ஆடினார். இந்தியா 1 விக்கெட் இழப்புக்கு 44 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில், ஷிகர் தவான் 14 பந்துகளில் 2 சிக்ஸர், 3 பவுண்டரியுடன் 24 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து அணித்தலைவர் விராட் கோஹ்லி களமிறங்கினார். அவர் ஒரு ஓட்டமே எடுத்திருந்த நிலையில், ஜூனியர் டாலாவிடம் வீழ்ந்தார். அப்போது இந்தியா 3 விக்கெட்டுக்கு 54 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அடுத்து களமிறங்கிய மணீஷ் பாண்டே ரெய்னாவுடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் அதிரடியாக ஆடினர்.

தொடர்ந்து சிறப்பாக ஆடிய ரெய்னா 24 பந்துகளில் 5 பவுண்டரியுடன் 30 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

அவரைத் தொடர்ந்து டோனி இறங்கினார். மணிஷ் பாண்டேவும் டோனியும் பொறுப்புடனும், அதிரடியாகவும் ஆடினர். இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென உயர்ந்தது.

அதிரடியாக விளையாடிய மணீஷ் பாண்டேயும், டோனியும் அரைச் சதமடித்து அசத்தினர். இருவரும் சிக்ஸர்களும் பவுண்டரிகளுமாக விளாசினர். இருவரும் இணைந்து 47 பந்துகளில் 107 ஓட்டங்களை இணைப்பாட்டமாகக் குவித்தனர். இறுதியில், இந்திய அணி 20 ஓவர்களில் 4 விக்கெட் இழப்புக்கு 188 ஓட்டங்கள் எடுத்தது. மணீஷ் பாண்டே 48 பந்துகளில் 3 சிக்ஸர், 6 பவுண்டரியுடன் 79 ஓட்டங்களுடனும், டோனி 28 பந்துகளில் 3 சிக்ஸர், 4 பவுண்டரியுடன் 52 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

தென்னாபிரிக்கா அணி சார்பில் ஜூனியர் டாலா 2 விக்கெட்டும், டுமினி, பெலுகோவோயா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 189 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்க அணி களமிறங்கியது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ஹெண்ட்ரிக்ஸ்(26), ஸ்மட்ஸ்(2) ஆகிய இருவரும் ஏமாற்றமளிக்க டுமினியும் கிளாசெனும் அதிரடி வேட்டை நடத்தினர். 30 பந்துகளைச் சந்தித்த கிளாசென் 69 ஓட்டங்கள் குவித்து அவுட்டானார்.

தொடர்ந்து மில்லர் வந்தவேகத்தில் 5 ஓட்டங்களுடன் வெளியேற டுமினியுடன் பெஹ்ராடென் இணைந்தார். அவரும் 10 பந்துகளை எதிர்கொண்டு 16 ஓட்டங்கள் குவித்தார். டுமினி 40 பந்துகளை சந்தித்து 64 ஓட்டங்கள் குவித்தார். இதனால் தென்னாபிரிக்கா அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்திய அணி சார்பில் தாக்கூர், பாண்டியா தலா ஒரு விக்கெட்டை கைப்பற்ற சாஹல் 4 ஓவர்களில் 64 ஓட்டங்கள் விட்டுக் கொடுத்து விக்கெட் ஏதும் எடுக்க தவறினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

69 ஓட்டங்களை எடுத்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்ற கிளாசன் ஆட்டநாயகனானார். இந்த வெற்றி மூலம், இரு அணிகளும் 1-1 என்று தொடரில் சமநிலையில் உள்ளன. (அ)

# செத்துப் பிழைத்த செரீனா வில்லியம்ஸ்



நியூயோர்க், பெப்.23

பிரசவ காலத்தில் பெரும் கஷ்டத்தை தான் அனுபவித்ததாக அமெரிக்காவின் பிரபல ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பிரபல ரென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸூக்கு கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் அழகான பெண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு ஒலிம்பியா ஒஹானியன் ஜூனியர் என்று பெயர் வைக்கப்பட்டது. அறுவை சிகிச்சை மூலம் செரீனா வில்லியம்ஸூக்குப் பிரசவம் நடந்தது. பிரசவத்துக்குப் பிறகு தான் சந்தித்த கஷ்டத்தை செரீனா வில்லியம்ஸ் தற்போது தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமெரிக்க பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரையில், 'எனது மகள் ஒலிம்பியா பிறந்த பிறகு நான் உயிர் பிழைத்து வருவேனா? என்று அச்சம் ஏற்பட்டது. குழந்தை பிறந்த பிறகு எனக்கு பல விதமான உடல் நலக்குறைவுகள் ஏற்பட்டன. நுரையீரல் தொற்றுநோய் காரணமாக எனக்கு அறுவை சிகிச்சையும் நடைபெற்றது.

மிகத்திறமையான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களால் நான் பழைய நிலைக்குத் திரும்பினேன்.

அவர்கள் சரியான கவனிப்பை அளிக்காமல் இருந்திருந்தால் இன்று நான் உயிருடன் இருந்து இருக்கமாட்டேன்' என்று உருக்கமாக தெரிவித்துள்ளார். (அ)

# தலையால் அடித்த சிக்ஸர்

ஓர்க்லண்ட், பெப்.23

நியூஸிலாந்தின் உள்ளூர் கிரிக்கெட் போட்டி ஒன்றில் துடுப்பாட்டவீரர் ஆக்ரோஷமாக அடித்த பந்து, பந்து வீச்சாளரின் தலையில் பட்டு பிறகு சிக்ஸருக்குப் பறந்த விநோதம் நிகழ்ந்துள்ளது.

ஃபோர்ட் வெற்றிக் கிண்ணத்துக்காக, 50 ஓவர் கொண்ட கிரிக்கெட் தொடரில் ஓர்க்லண்ட் அணியும், கேண்டர்பரி அணியும் மோதின. இதில் ஓர்க்லண்ட் அணிவீரர் ஜீத் ராவல் துடுப்பெடுத்தாடிய போது, கேண்டர் பரி அணித்தலைவர் அன்ட்ரூ எல்லிஸ் பந்து வீசினார்.

அப்போது ஜீத் ராவல் தொடர்ச்சியாக 2 சிக்ஸர் அடித்தார், இதில் 2 ஆவது பந்தை ஆர் அடித்த போது, அது பந்தை வீசிய எல்லிஸின் தலையில் பட்டு சற்றும் எதிர்பாராத விதமாக சிக்ஸருக்குப் பறந்தது. முதலில் நடுவர் பவுண்டரி என்று செய்கை செய்தார், பிறகு தன் முடிவை சிக்ஸ் என மாற்றினார்.

தலையில் அடிபட்டவுடன், உடனடியாக எல்லிஸூக்கு மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் பந்து பட்டதால் ஆபத்தில்லை என்று உறுதியானவுடன் அவர் மேலும் 6 ஓவர்களை வீசினார். இந்தப் போட்டியில் அவர் 7 ஓவர்கள் வீசி 52 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார். இதில் ஜீத் ராவலின் விக்கெட்டும் அடங்கும். (அ



# "பாகிஸ்தான் வேண்டாம் ஆஸியே என் அணி"



சிட்னி, பெப்.23

பாகிஸ்தான் கிரிக்கெட் நிர்வாகத்தில் உள்ள 'அரசியல், ஊழல்' காரணமாக முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் அப்துல் காதிரின் மகன் உஸ்மான் காதிர் அவுஸ்ரேலிய அணிக்காக ஆடப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

24 வயதான உஸ்மான் காதிரும் தந்தையைப் போல சிறந்த சுழற்பந்து வீச்சாளர்தான். அவர் 2020 இல் நடைபெறவுள்ள ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் அவுஸ்ரேலியாவுக்காக விளையாடுவேன் என்று நம்பிக்கையுடன் கூறியுள்ளார்.

ஆனால் இவரது இந்த முடிவுக்கு பாகிஸ்தான் ரசிகர்கள் ஏற்கனவே 'துரோகி' கோஷமிடத் தொடங்கி விட்டனர்.

உஸ்மான் காதிர் தற்போது சிட்னியில் ஹாக்ஸ் பரி கிரிக்கெட் அணிக்காக ஆடிவருகிறார். 9 போட்டிகளில் 30 விக்கெட்டுகள் என்பதோடு 3 முறை 5 விக்கெட்டுகளையும் வீழ்த்தியுள்ளார்.

இதனையடுத்து ஜெஃப் லாசன், ஜஸ்டின் லாங்கர் ஆகியோர் இவரைப் புகழ்ந்துள்ளனர். ஜஸ்டின் லாங்கர் ஒருபடி மேலே சென்று பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணியுடன் பயிற்சி செய்ய இவரை அழைத்துள்ளார். அடுத்த பிபிஎல் டி20 தொடரில் பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணிக்காக ஆடவும் உஸ்மான்காதிரை ஜஸ்டின்லாங்கர் தெரிவு செய்துள்ளார்.

ஷெஃபீல்ட் ஷீல்ட் போட்டித் தொடரில் மேற்கு ஆவுஸ்ரேலிய அணிக்கு ஆடும் வாய்ப்பும் உஸ்மான் காதிருக்குக் கிடைக்கவுள்ளது. (அ)

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 23.02.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.